தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983, சனவரி 29.

தை 16, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்

தந்நோய்போல் போற்றாக் கடை.''

பிற உயிருக்கு உண்டான துன்பத்தைத் தமக்கு நேர்ந்த துன்பம்போல் எண்ணி அந்த உயிரைக் காப்பாற்றாவிட்டால், ஒருவர் பெற்றுள்ள அறிவினால் உண்டாகக் கூடிய பயன் ஒன்றும் இல்லை.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சண்முக நதி நீர் மின்திட்டம்.

*வினா எண் 41—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி சண்முக நதி நீர் மின் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதற்கு மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அது எத்தனை மெகாவாட் சக்தி உள்ளது ?

(ஈ) மைய அரசு அதற்கு அனுமதி கொடுத்து விட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஈ): இத்திட்டத் திற்கான ஒப்புதலை மத்திய அரசு இன்னமும் கொடுக்கவில்லை. ஆனாலும், தமிழ்நாடு அரசின் ஒப்புதலுடன் இத்திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள், மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ. 2051 லட்சங்களாகும்.

(இ) 30 மெகாவாட் உற்பத்தித் திறன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 20 கோடியே 51 இலட்சம் ரூபாய்த் திட்டம் என்று சொன்னார்கள். 1978–79 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு இதற்கு அனுமதி கொடுக்காததன் காரணம் என்ன என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1978–79 ஆம் ஆண்டிலிருந்து அல்ல; இந்தத் திட்டம் 1972 இல் அனுப்பப்பெற்றது. தொழில் நுட்ப ரீதியாக சாத்தியக்கூறுகள் இருந்தாலும் சண்முக நதி என்பது காவிரியாற்றுப் படுகையில் வருகின்ற ஒரு துணைநதி என்பதால் இன்னும் அனுமதி கிடைக்கப் பெறவில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சண்முக நதி நீர்மின் திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கின்ற மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இது உதவியாக இருக்கும். அதோடு மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையில் இது அடங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியிருந்தும் இந்த வேலைகளை நாம் ஆரம்பித்திருப்பது நல்ல அம்சமதாகும். இதுபோலத் தமிழ்நாட்டில் எத்தனை நீர் மின் திட்டங்கள் மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல் இருந்து வருகின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எத்தனை திட்டங்கள் என்ற விவரத்திற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். ஆனால் இது மேற்கு நோக்கிப்பாய்கின்ற ஆறுகளோடு சம்பந்தப்பட்டது அல்ல. இத் திட்டம் காவிரியாற்றுப் பள்ளத் தாக்கில் உள்ளதால் கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் ஒப்புதலை மத்திய மின் அதிகார மன்றம் கோரியுள்ளது. நாம் சொல்வது, சண்முக நதி முழுக்க முழுக்கத் தமிழகத்தில் இருக்கிறது. கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான வழி இல்லை. போகின்ற தண்ணீரை அணை கட்டி மின் உற்பத்தி செய்வதில் என்ன தவறு என்று எழுதியிருக்கிறோம். அதற்கும் இன்னும் அனுமதி வரவில்லை.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே மின் பற்றாக்குறை ஒரு அதிர்ச்சி வைத்தியம் மாதிரி தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. 1970, 1972-இலிருந்து சிறிய திட்டங்களைக் கூட மத்திய அரசு ஏற்க மறுக்கிறது. ஆகவே, இன்றைக்காவது மாநில அரசு ஹொகேனக்—கல்லிலிருந்து சண்முக நதித் திட்டம் வரையில் எந்தெந்தத் திட்டங்களைச் சமர்ப்பித்திருக்கிறோம் என்பதை மக்களுக்கு அறிவிக்க முன்வருமா ? ஏற்கனவே நிறுத்தப்பட்ட சமயநல்லூர் மின் திட்டத்தை மீண்டும் புதுப்பிக்க முன்வருமா ?

1983 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது மிகவும் பெரிய கேள்வி. ஆகையினாலே இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் தான் விவரமாகப் பதில் தர இயலும். மின்சாரப் பற்றாக்குறை நமக்குப் பெரிய அதிர்ச்சி வைத்தியம் என்று சொன்னார்கள். அதிர்ச்சிதான் கிடைத்திருக்கிறதே தவிர இன்னும் வைத்தியம் கிடைக்கவில்லை.

மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது குறித்து நீதிபதி W. S. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அளித்த பரிந்துரை.

* வினா எண் 42—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதிபதி W. S. கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் தீர்ப்பின் அடிப்படையில் 124 மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது பற்றி நீதிபதி டபிள்யு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு கமிஷனின் பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கோரி மின்வாரிய ஊழியரான திரு. ராபின்சன் என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவின் மீது நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அண்மையில் 21—1—8 அன்று இது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது, ஆகையினாலே இதன்மீது மின் வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தற்காலிக ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதில் தமிழ்நாடு மின்சார அணைக்கட்டுத் தொழிலாளர் சங்கமும், தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும் செய்த நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் அந்த வாரியத்தினுடைய ஆணைகளுக்கு முற்றிலும் முரணாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டது என்று தீர்ப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் அந்தப் பதவி உயர்வு பெறத் தவறியவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கிற போது அன்றைய தேதியிலே இருந்து சம்பளம் கிடைப்பதற்கு வாரியம் பரிசீலிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.